# உலகத் திருக்குறள் மாநாடு - 2019



மலாயா பல்கலைக்கழகம், கோலாலம்பூர், மலேசியா

## சிறப்பு மலர்





தொகுப்பாசிரியர் : கவிஞர் **உடையார்கோயில் குணா**

தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு

Page no: 108 - 112

# உலகத் திருக்குறள் மாநாடு - 2019

# மலேசியா




தொகுப்பாசிரியர் :

**கவிஞர் உடையார்கோயில் குணா**

வெளியீடு

## தமிழ்த்தாய் அறக்கட்டளை

மாரியம்மன்கோயில், தஞ்சாவூர் - 613501, தமிழ்நாடு

கைப்பேசி : 009175 3000 2454 / 0091 94439 38797

மின்னஞ்சல் : thamilthaitrust@gmail.com



# திருக்குறளும் பழந்தமிழ் இலக்கியங்களும் கூறும் நடுகல் வழிபாட்டை அடையாளப்படுத்திக் காட்டும் தொல்லியல் ஆதாரங்கள்

திருமதி. **சிவரூபி சயிதரன்**

தொல்லியல் விரிவுரையாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பண்டைத் தமிழர்களின் மிகத் தொன்மையான இலக்கியங்களாக பதினென் மேற்கணக்கு, பதினென் கீழ்கணக்கு, ஐம்பெரும் இலக்கியங்கள், ஐந்சிறுகாப்பியங்கள் என்பன அமைகின்றன. இவற்றில் திருக்குறள் பெரிதும் எல்லோருக்கும் எக்காலத்திற்கும் பொருத்தமுடைய உலக பொதுநூலாகும். இதன் காரணமாகவே திருக்குறள் முப்பத்து நான்கிற்கு (34) மேற்பட்ட மறு பெயர்களை கொண்டு சிறப்புப் பெற்றிருக்கின்றது. ( சஞ்சீவி.ந.1981). நடுகற்கள் பற்றிய தொல்லியல் ஆதாரங்களினை

திருக்குறள் உட்பட்ட பழந்தமிழ் இலக்கியங்களின் பிண்ணயில் ஆராய்வதனூடாக அக்கால அரசியல் பொருளாதார சமூக, சமய, பண்பாட்டு நம்பிக்கைகளை கண்டறிவதாகவும், நடுகற்கள்

அமைக்கும் மரபு திருக்குறள் தோற்றம் பெற்ற காலத்தினைத் தொடர்ந்து பெற்றிருந்த செல்வாக்கினையும், அதன் வளர்ச்சி நிலையினையும் ஆராய்வதாகவும், அதனூடாக ஒரு சமுதாய தொடர்ச்சியினை வெளிப்படுத்துவதாகவும் இல்வாய்வு அமைகின்றது.

போரில் இறந்த வீரருக்கு நடுகல் அமைக்கும் மரபும் திருக்குறள் கால சமுதாயத்தில் வழக்கிருந்ததனை,



என்னைமுன்நில்லன்மின்தெவ்விர்பலரென்னை
முன்னின்று கல்நின் றவர்" (குறள் 771)

என்ற குறளினூடாக அவதானிக்கமுடிகின்றது. இங்கு போர்கள வீரனொருவன் எதிரிகளை நோக்கி என் அரசின் முன்னே போரிட நிற்காதீர் உங்களைப் போலவே இதற்கு முன்னர் பலர் நின்று இப்போது நடுகல்லில் சிலையாக நிற்கின்றனர் எனக் குறிப்பிடுகின்றான்,

திருக்குறள் காலத்தில் வீரத்திற்கு முக்கியத் துவம் அளிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பின்னணியிலேயே நடுகற்களின் அமைவு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. திருக்குறள் காலத்திற்கு

முன்னரே தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால ஈமச் சின்னங்கள், இறந்தோருக்கு உருவாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் தாழிகள், போர்க்கருவிகள், வாள், வேல், அம்புகள்

போன்றவை கண்டறியப்பட்டுள்ளன. இவை போர் வீரத்திற்கும், ஈமச்சின்னங்களுக்குமிடையிலான தொடர்பை புலப்படுத்தி நிற்கின்றன (பூங்குன்றன், காட்பாடி, 2007), இதன் தொடர்ச்சியாகவே போர் வந்தால் தம் உயிருக்கு அஞ்சாது போர் செய்யத் துணியும் வீரம், உயிரைத் துச்சமாக மதித்து போரிடும் படைவீரர்கள், புறமுதுகு காட்டாமை, வீரமரணம் அடைவதின் சிறப்பு, போரின் போது பட்ட விழுப்புண், உயிரைப் பற்றி கவலைப்படாத வீரர்களின் காலில் கட்டப்படும் வீரக்கழல் மற்றும் போரில் இறந்த வீரருக்கு அமைக்கப்படும் நடுகற்கள் என போர்வீரர்களின் வீரம், சிறப்பு போன்றவை திருக்குறளில் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. ஒருசில உதாரணங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும்.

"விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளை எடுத்து" (குறள் 776)

ஒருவீரன் தன் கடந்த நாள்களை எண்ணி எடுத்து அவற்றுள் போரின் போது விழுப்புண் படாத நாட்களை பயனில்லாமல் கழித்த நாட்களாக கருதுவான்.

"புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்கா
டிரந்து கோட்டக்க துடைத்து" (குறள் 780)

தம்மைக் காத்த தலைவருடைய கண்கள் நீர் பெருகுமாறு சாகப் பெற்றால், அத்தகைய மரணம் பிறரிடம் கேட்டுப் பெறத்தக்க சிறப்பினை உடையது.

பெருங்கற்கால ஈமச் சின்னங்கள் அடையாளப் படுத்தப்பட்ட நெடிய கற்கள் சங்ககாலத்தில் நடுகல் என அழைக்கப்படுகின்றது. சங்க காலத்தில் போரில் வீழ்ந்த வீரனை கல்லில் அமைத்து வழிபடும் நடுகல் வழிபாடு சிறப்புற்றிருந்ததை சங்க இலக்கியங்கள் பலவும் குறிப்பிடுகின்றது. நடுகல் மரபு தோற்றம் பெறுவதற்கு முன்பு இயற்கையாக அமைந்த பெரிய கல் ஒன்றிற்கு அருகே வீரர்களைப் புதைக்கும் வழக்கமிருந்தது. இம்மரபே நெடுங்கல்லாகும். புறநானூறு, அகநானூற்றுப் பாடலடிகள் பல நெடுங்கல் பற்றி குறிப்பிடுகின்றன. அகப்பாடலொன்றில்"நட்ட போலும் நடாஅ நெடுங்கல்" (அகம் 2037:8) என நெடுங்கல் பற்றிய செய்தியைக் காண முடிகிறது. நடுகல் பற்றிக் கூறும் புறநானூறு சிறந்த வீரனுக்கு நடுகல் நாட்டி அவன் பெருமைகளை கல்லிலே பொறித்து, அக்கல்லை

மக்கள் வழிபட்டதாகக் கூறுகிறது. இந்நடுகற்களை மரநிழலின் கீழ் அமைத்து அவற்றைத் தெய்வமாகப் போற்றியதாக மலைபடுகடாம் கூறுகிறது. புறநானூற்றில் நடுகல்



என்று எழு இடங்களிலும் (221, 223, 232 261, 306. 314 329) கல் என்று நான்கு இடங்களிலும் (260, 263,265, 335) காணப்படுகின்றது. பொதுவாக இறந்த வீரனுக்கு மட்டுமே (வீரக்கல்) பண்டைக் காலத்தில் நடுகல் அமைத்து வழிபடப்பட்டதாகக் கருதும் மரபு நீண்டகாலமாக இருந்து வருகின்றது. ஆனால் அண்மைக் காலங்களில் தமிழகத்தில் செங்கம், தருமபுரி மாவட்டங்களில் கிடைத்த கல்வெட்டு ஆதாரங்களிலிருந்து சமூகத்தில் பலதரப்பட்ட மக்களுக்கும், பல தரப்பட்ட

தொழில் புரிந்தோருக்கும் நடுகல் அமைத்து வழிபடப்பட்டமை தெரியவந்துள்ளது. இவ்வாறாக சங்க காலத்தில் இறந்தவர் வழிபாடாகிய நடுகல் வழிபாடு சிறப்புற்றிருந்த தன்மையினை அறியமுடிகிறது.

அகம், புறம், ஐங்குறுநூறு போன்ற இலக்கியங்கள் நாணுடை மறவர்களுக்கு நடப்பட்ட நடுகல் பற்றிக் குறிப்பிடுகின்றது. புறநானூற்றுப் பாடலொன்று களிறெறிந்து பட்ட வீரர்களுக்கு (மாடுபிடி சண்டை ) நடுகல் அமைத்த செய்தியைக் குறிப்பிடுகின்றது .

**"ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி**
**ஒளிறே ந்து பருப்பு களிறெறிந்து வீழ்ந்தெனக்**
**கல்லே பரவி னல்லது**
**நெல்லு குத்துப்பரவுங் கடவுளு மிலவே**
**(புறம் 335)**

தொல்காப்பியம் மற்றும் மணிமேகலை போன்ற இலக்கியங்களிலும் நடுகல் அமைப்பு முறைகள் பற்றிய செய்திகளை காணமுடிகிறது தொல்காப்பியம் நடுகல் வழிபாட்டினை வரைவிலக்கணப்படுத்தியுள்ளதோடு, அவ்வழிபாட்டிற்குரியதான காட்சி கால்கோள், நீர்ப்படை, நடுதல், விழா, வாழ்த்துதல் என்ற ஆறு ஒழுங்கு முறைகளினையும் எடுத்துக் கூறியுள்ளது.

**"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்**
**சீர் தரு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்**
**றிருமூன்று வகையிற் கல்லொடு**
**(தொல்பொருள்: 60:1921)**

மேலும் மணிமேகலைப் பாடல் வரிகள் இறந்தவர்களுடைய ஈமக் கிரியைகள் பற்றி கூறும் போது சுடுபவர், இறந்தவர்களை ஓரிடத்தில் வைத்தல், குழியில் இடுதல், நிலத்துக்கடியில் கல்லறை அமைத்து வைத்தல், தாழிகள் அமைத்து அதன் மேல் மூடி கொண்டு மூடுதல் என ஐந்து முறைகளினை குறிப்பிட்டுள்ளது.

**"சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுவோர்**
**தாழ்வயின் அடைப்போர் தாழியிற் கவிப்போர்"**
**(மணிமேகலை 6.111.11.6667)**

இவ்வாறாக பெருங்கற்காலப் பண்பாட்டின் வளர்ச்சி நிலையை தொடர்ந்து நடுகற்கள் அமைக்கும் மரபு மிகத் தொன்மை வாய்ந்த வரலாற்றினையுடையதாகும். இலங்கையினை விட வகையிலும்

தொகையிலும் அதிகமான நடுகற்கள் பற்றிய தொல்லியல் சான்றுகளினை தென்னிந்தியாவில் பரவலாக காணப்பட்டதனை தொடர்பான ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளது. இவ்வாய்வுகளில் நடுகற்கள் எழுத்துடன் கூடியதாகவும், எழுத்தற்ற வகையிலும், உருவங்கள் வரையப்பட்டதாகவும் போரில் இறந்த வீரர்கள், அரார்கள், மாடுபிடி சண்டையால் இறந்தோர் போன்ற சமூகத்தில் பலதரப்பட்டவர்களுக்கும் அமைக்கப்பட்டதனை எடுத்துக் காட்டுகின்றன. தொல்லியல் ஆய்வுகள் மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்குகள், பறவைகள் (கோழி, நாய்)



போன்றனவற்றுக்கும் நடுகற்கள் அமைத்த மரபையும் புலப்படுத்தி நிற்கின்றன. எழுத்துக்கள் மற்றும் உருவத்துடன் கூடிய நடுகற்கள் அவை அமைக்கப்பட்ட காத்து அரசியல், பொருளாதார, சமய, சமூக, கலை, எழுத்து, மொழி அம்சங்களை அறிவதில் பெரும்பங்கு வகிப்பதனை தொல்லியல் ஆய்வுகளின் முடிவுகள் உறுதிப்படுத்தி நிற்கின்றன.

பெருங்கற்கால ஈமச்சின்னங்களைத் தொடர்ந்து அ பண்பாட்டு முதிர்ச்சி நிலையில் தோற்றம் பெற்ற சங்க காலத்தில் வளர்ச்சி பெற்ற நிலையிலும், திருக்குறள், தொல்காப்பியம், மணிமேகலை போன்ற இலக்கியங்களில் இறந்தவர் வழிபாடு பற்றி கூறப்பட்டுள்ளமையும், தொடர்ந்து பல்லவர், சோழர்காலத்திலும் நடுகல் அமைக்கும் வழக்கம் வழக்கத்திலிருந்த திணை தொல்லியல் ஆய்வுகளூடாக அறிந்து கொள்ள முடிகின்றது. இவை நடுகல் அமைக்கும் மரபு நினைவுச் சின்னங்கள் அமைக்கும் வழக்கம், முன்னோர் வழிபாடு என்பவற்றின் தொன்மையான தொடர்ச்சி நிலையினை எடுத்துக் காட்டுவதாகவே அமைகின்றதெனலாம். இறந்தோர் வழிபாடு பிற்காலங்களில் கிராமிய தெய்வ வழிபாடு மாற்றம் பெற்றிருந்த தன்மையை தமிழர் சால்பு என்ற நூலில் சு.வித்தியானந்தன் "ஐயனார் மதுரை வீரன் இருளன், கருப்பன் நொண்டி முதலான நடுகற் தெய்வங்கள் நீத்தோர் வழிபாட்டின் பின்னணியில் பின்னால் உருவானது எனவும், இது நீத்தோர் வழிபாட்டுடன் தொடர்புடையதாக மாற்றப்பட்டதும் என்கிறார். முன்னோர் வழிபாட்டின் இன்னொரு வடிவமாவை சமாதி கோயில் அமைப்பினையும் குறிப்பிட முடியும் இறந்தவர்களின் பொருட்டு சுமைதாங்கி கற்கள், ஆவுரஞ்சிக்கற்க அமைத்திருந்த மரபினையும்

இலங்கையில் தமிழர் பிரதேசங்களில் காண முடிகிறது. இது பெரும்பாலும் பண்டைய காலத்தில் மக்கள் போக்குவரத்திற்காகவும் வணிகத்திற்காகவும் ஒன்று கூடிய இடங்களில் காணப்படுகின்றன. இச்சின்னங்கள் சமூகத்தில் செல்வாக்குப் பெற்ற குடும்பங்களால் ஆண் பெண் இருபாலாருக்கும் இறப்பில் நினைவாக எழுப்பப்பட்டவையாகும். இந்நினைவுச் சின்னங்கள் பலவற்றில் இறந்தவர் பெயருடன் அவற்றை அமைத்துக் கொடுத்தவர் பெயர் பரம்பரை சமயம் சமூக அந்தஸ்து என்பனவும் எழுதப்பட்டுள்ள. சில இடங்களில் உள்ள ஆவுரஞ்சிக்கல்

சுமைதாங்கி என்பவற்றுக்கு இறந்தவரின் நினைவுநாளில் பொங்கல் வைத்தல், படையல் இட்டு வழிபடுதல் போன்ற முறைகளும் காணப்படுகின்றன. இதன் தொடர்ச்சியாக கால மாற்றத்திற்கேற்ப தற்போது இறந்தவர்களுக்கு பேருந்து நிறுத்தங்கள் போன்ற நினைவுச் சின்னங்கள் அமைக்கும் வழக்கத்தினையும் காணமுடிகிறது. இவ்வாறாக தமிழர்களின் மிக முக்கிய நூலாகிய திருக்குறளில் நடுகல் அமைக்கும் வழக்கம் மறுபிறப்பு போ வீரம் பற்றிய செய்திகள் பல்லாம் அக்காலர்

சமூகத்தில் இறந்தவர் வழிபாடு பற்றிய ஒருவித சமூக சமய நம்பிக்கையினையே வெளிப்படுத்தியுள்ளதெனலாம். இந்திய இலங்கைத் தமிழ் மக்களிடையே இற்றைவரை நடுகற்கள் அமைக்கும் மரபு பல வடிவங்களில் தொடர்ந்து வருவதனை அவதானிக்க முடிகின்றது.

அவற்றினை நினைவுக்கற்கள். நினைவுச் சின்னங்கள், ஆவுரஞ்சி, சுமைதாங்கிக் கற்கள் சமாதி கோயில்கள், பள்ளிப்படைக் கோவில்கள், நினைவுக் கல்வெட்டு (நினைவு மலர்கள்), கிராமிய, குலதெய்வ வழிபாட்டம்சங்கள் என



பலவகைப்படுகின்றன. தற்காலத்தில் இறந்தவர் நினைவாக வெளியிடப்படும் நினைவுமலரை கல்வெட்டென அழைப்பது தொன்மையான மரபுகளின்

தொடர்ச்சியினையே சுட்டுகின்றதெனலாம். இவ்வாறாக திருக்குறளில் கூறப்பட்ட நடுகல் பண்பாட்டின் தொடர்ச்சி நிலையான வளர்ச்சியின் இற்றை வரை இனங்காண முடிகின்றது எனலாம்.

**உசாத்துணை நூல்கள்**


1. சஞ்சீவி. ந.1981, திருக்குறளில் மரபுகள் சென்னைப் பல்கலைக்கழகம்.

2. பூங்குன்றன், காட்பாடி 2007, ஆவணம் 18

3. புஸ்பரட்ணம் ப.2018 தமிழர் பண்பாட்டு மரபில் இறந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள், வெளியிடப்படாத கட்டுரை.


## தமிழ்ப் படைப்புகளை பதிப்பித்து முனைவர் கோ.விசயராகவன் உலக சாதனை!






தமிழ் உணர்வோடு தன்னை நாடுபவர்களை ஊக்கப்படுத்துவதிலும், அவர்களை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்கிற உயர்ந்த உள்ளமும், இலட்சியமும் உடையவர் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித்துறை மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் கோ.விசயராகவன் ஆவார்.

அவரது இடையறாத முயற்சியால் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் கடந்த 5 ஆண்டுகளில் 1000 புத்தகங்கள் பதிப்பித்து உலக சாதனையை எட்டியுள்ளார். அந்த வரிசையில் தஞ்சாவூர், தமிழ்த்தாய் அறக்கட்டளையின் பொதுச்செயலாளர் கவிஞர் உடையார்கோயில் குணா தொகுத்தளித்த அறிஞர்கள் பலரின் ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய ''திருக்குறள் தேசிய நூல்'' பன்முக ஆய்வுப்பார்வை என்ற தொகுப்பு நூல் 2014ஆம் ஆண்டு பதிப்பாக வெளிவந்துள்ளது என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

''திருக்குறள் தேசிய நூல்'' - என்கிற தலைப்பில் முதலாவதாக வெளிவந்துள்ள நூல் இதுவாகும்.



உள்ளத்தனையது உயர்வு

# தமிழ்த்தாய் அறக்கட்டளை - தஞ்சாவூர்

### தோற்றமும் வளர்ச்சியும்

தமிழைச் செம்மொழியாகவும், திருக்குறளைத் தேசிய நூலாகவும் இந்திய அரசு அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்காக 2003-04ஆம் ஆண்டுகளில் கவிஞர் உடையார்கோயில் குணா தலைமையில் கன்னியாகுமரி முதல் சென்னை வரை 63 நாட்கள் தொடர் நடைப்பயணம் மேற்கொண்டு ‘செம்மொழி வெற்றி’ பெற்றதன் நினைவாக தமிழ்த்தாய் அறக்கட்டளை 17.09.2005இல் நிறுவப்பெற்றது.

தமிழ்த்தாய் அறக்கட்டளை சார்பாக கிராமங்களில் தமிழ் விழிப்புணர்வு பரப்புரைப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. முத்துப்பேட்டை அலையாத்திக் காடுகளில் படகுக் கவியரங்கம் நடத்தப் பெற்றது. கும்பகோணம் பள்ளித் தீ விபத்தில் உயிரிழந்த 99 குழந்தைகளின் உருவப்படங்களை ஒரே நேரத்தில் திறந்து வைத்து 99 கவிஞர்கள் கலந்துகொண்ட கவிதாஞ்சலிக் கூட்டம் நடத்தப்பட்டது. அந்தமான் பயணக் கப்பலில் புத்தக வெளியீட்டு விழா, ஆக்ரா தாஜ்மகாலில் முதல் தமிழ்க் கவியரங்கம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளோம். தினத்தந்தி பத்திரிகையின் நிறுவனர் தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் நூற்றாண்டு விழழ, செம்மொழி பேராளிகளுக்குப் பாராட்டு விழா மாநாடு நடத்தியுள்ளோம்.

மேலும், கொல்கத்தா பாரதி தமிழ்ச்சங்கம், பெங்களூரு தமிழ்ச்சங்கம் அந்தமான் தமிழ்ச் சங்கம், மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், மைசூரு